மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளியை அரசு எடுத்து நடத்தலாம் என தற்காலிக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த பல்தொழில் பயிற்சிப் பள்ளிக்குச் சொந்தமான நிலங்கள் கட்டிடங்கள் இதர சொத்துக்கள் யாவற்றையும் அரசுக்கு மாற்றிக் கொடுத்தவுடன் இது பற்றிய முடிவான ஆணை வெளியிடப்படும்.

Starting of Dry-farming in Hosur

* 111 *Q.*—THIRU B. VENKATASAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start intensive dry farming in Hosur taluk, Dharmapuri district; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Not only Hosur Taluk, but the entire Dharmapuri District provides ample opportunities and ideal conditions for improving the dry cultivation and also it provides good response. So, may I request the Hon. Minister to state whether the Government are going to have special schemes to improve the dry cultivation there?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஒருங்கிணைந்த புன்செய் நில மேம்பாட்டுத் திட்டம் ஒரு மத்திய அரசுத் திட்டமாகும். வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் ஒன்றின் அருகில் இத்திட்டத்தின் முன் மாதிரிப் பகுதி அமைந்திருத்தல் வேண்டும் என்பது நிபந்தனைகளில் ஒன்றாகும். அப்போது தான், புன்செய்ப் பண்ணை குறித்த ஆராய்ச்சி முடிவுகளையும் புன்செய்ப் பயிர் விளைச்சல் தொடர்பாக எழும் பிரச்சினைகளையும் முறையே ஆராய்ச்சி நிலையத்திலிருந்து அதன் அருகிலுள்ள திட்டப் பகுதிக்கும், திட்டப் பகுதியிலிருந்து ஆராய்ச்சி நிலையத்திற்கும் தெரிவித்துப் பயனுற இயலும். இந்தத் திட்டம் குறித்து, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 8,000 ஏக்கர் மொத்தப் பரப்பளவுள்ள நிலம் பயனடைய இந்த முன்னோடித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவில் இச்சாதனை கிட்டும். முன்னோடித் திட்டம் ஒவ்வொன்றுக்காகவும் இந்திய அரசு சுமார் 25 லட்சம் செலவழிக்கும். மானியங்களும் கடன்களும் இத்தொகையில் அடங்கும்.

பெரும்பாலும் கரிசல் மண் நிறைந்த கோவில்பட்டியில் சுமார் 8,000 ஏக்கர் நிலம் இறுதியில் பயனடையும் பொருட்டு, ஒரு முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த 1970-71-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. அந்த ஆண்டில் தாமதித்து ஒப்பளிப்பு வழங்கப்பட்டதாலும், திட்டம் காலங்கடந்து செயல்படுத்தப்பட்டதாலும், 860 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில்தான் நடவடிக்கை மேற்கொள்ள இயன்றது. நடப்பு ஆண்டு 1971-72-ல் சென்ற ஆண்டில் செயல்படுத்தாமல் விடப்பட்ட சுமார் 1,200 ஏக்கருக்கு மேல் கூடுதலாக 2000 ஏக்கர் குறிக்கோள் அளவை எய்த வகை செய்யப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையைச் சுற்றியுள்ள செம்மண் நிலம் பயன் அடைவதற்கென்று அது போன்ற செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு, இந்திய அரசின் ஒப்புதலைப் பெற அனுப்பப்பட்டுள்ளது. இச்செயற்குறிப்பிற்கான ஒப்புதல் இந்திய அரசிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது. பயன்பெறவிருக்கிற பகுதி, புதுக்கோட்டைக்கும் குடுமியா மலையிலுள்ள “ கலைஞர் கருணாநிதி பயிர்வள ஆராய்ச்சி நிலையத்திற்கும் ” அருகில் அமைந்துள்ளது. எனவே, இத்திட்டம் குடுமியாமலை பண்ணையின் ஒத்துழைப்புடன் நன்முறையில் செயல்பட முடியும். இத்திட்டத்திலும் 8,000 ஏக்கர் நிலம் அடங்கும். மேலும் கோவில்பட்டி திட்டத்துக்குக் கிடைக்கும் அதே அளவு நிதி ஒதுக்கங்கள் இத்திட்டத்திற்குக் கிடைக்கும்.

இந்த அடிப்படையில். ஓசூர் வட்டத்தில் புன்செய்ப் பண்ணைத் திட்டம் ஒன்றைத் தொடங்குவது குறித்து இப்போது எந்தச் செயற்குறிப்பும் இல்லை.

சலவைத் துறைகள் கட்ட நிதி உதவி

* 112 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ‘ டோபிகானா ’ கட்ட தற்போது சர்க்கார் உதவித்தொகை கொடுத்து வருகிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தமிழகத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ‘ டோபிகானா ’ (சலவைத் துறை) கட்ட சர்க்கார் உதவித்தொகை கொடுக்கவில்லை என்றாலும், பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் சலவைத் துறைகள் கட்டுவதற்கு நிதியுதவியளிப்பதற்கான திட்டம் சர்க்காரிடம் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சலவைத்துறை இல்லாத காரணத்தினால், ஊரிலுள்ள குளங்களில் சலவைத்தொழிலாளிகள் துணி துவைப்பதால் சுகாதாரக் கேடுகள் ஏற்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒவ்வொரு சலவைத் துறை ஏற்படுத்த வேண்டுமென்ற லட்சியத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.